**சார்பு நீதிமன்றம், ஓமலூர்.**
**MCOP.50/2020**

நாள்: 04.06.2026

The oaths Act 1969 Act No.44/1969 விதிமுறைகளின்படி 04.06.2026ம் நாளாகிய இன்று திருமதி.உமா, Gr–II பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி மொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை திறந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| சாட்சி: | எ.சா.1 | ஜாதி | -------- |
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| த/பெ. | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| வட்டம் | | | |

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். எங்கள் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களுக்கு குற்ற எண்.419/2019 சம்பந்தப்பட்ட வழக்கின் முதல் தகவல் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கை, கு.வி.மு.ச.161ன் கீழான வாக்குமூலங்கள் மற்றும் மாதிரி வரைபடம், நீதிமன்ற தீர்ப்புரை ஆகியவைகளை எடுத்து வந்து சாட்சியம் அளிக்கச் சொல்லி அழைப்பாணை கிடைக்கப் பெற்றதன்பேரில் உதவி ஆய்வாளர் மேற்படி குற்ற எண்.419/2019 வழக்கின் வழக்கு கோப்பை என்னிடம் கொடுத்து சாட்சியம் அளித்துவர உத்தரவிட்டதன்பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கிறேன்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8, 9 ஆவணங்களான மாதிரி வரைபடம் மற்றும் இறுதி அறிக்கை குற்ற எண்.419/2019உடையது என்றால் ஆமாம். வழக்கு பதிவு செய்தபோது முதல் தகவல் அறிக்கையில் Hit and run என்று தான் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். மா.சா.ஆ.9 ஆவணத்தில் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 134பி, உ/இ 177ன்படியும், குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கையானது Hit and run என்று பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலையில் குற்ற இறுதி அறிக்கையில் எதிரி எவ்வாறு கண்டறியப்பட்டார் என்பது குறித்து குறிப்பிட்டு சொல்லப்படாததால் இந்த விபத்தில் KA 53 ME 2599 சம்பந்தப்பட்டதல்ல என்றால் தவறு. C D–ல் எவ்வாறு மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் கண்டறியப்பட்டார்

என்பது குறித்து பதிவுகள் இருக்கிறது. (நீதிமன்றம் பார்வையிட்டபோது அவைகள் குறித்த பதிவுகளும், புகைப்படங்களும் இருந்தது.)

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கின் குற்ற இறுதி அறிக்கையானது சரியான புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தான் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். இந்த வழக்கின் எதிரியான புவனேஸ்வரன் என்பவர் தான் KA 53 ME 2599 என்ற வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தவில்லை என்று எங்களிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

(ஒப்பம்/–த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.